**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2024 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18-ம் நாள் வியாழக்கிழமை

**IA NO.1009/2023**

**In**

**O.S No.135/2016**

குருஜாலா ஜெயராமையா ......**பிரதிவாதி/மனுதாரர்**

**//எதிர்//**

ராஜாமணி .....**வாதி/எதிர்மனுதாரர்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, பிரதிவாதி/மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கோவிந்தராசு,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், வாதி/எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பத்மநாமன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது பிரதிவாதி/மனுதாரர் தரப்பில் CPC Section 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இந்த நீர் வழக்கு வாதியால்/2 ம் பிரதிவாதியான மனுதாரர் மீதும் இதர பிரதிவாதிகள் மீதும் பிராது பரிகாரங்கள் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, 2 ம் பிரதிவாதியான மனுதாரர் தரப்பில் DW1 சாட்சியான

மனுதாரரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளது. ஆனால் மனுதாரருக்கு தாய்மொழியான தெலுங்கு மொழியினை தவிர வேறு எந்த ஒரு மொழியும் தெரியாத காரணத்தினால் மனுதாரருக்கான சான் பேசும் தெலுங்கு மொழியினை தமிழில் மொழி பெயர்த்து கூறுவதற்கு ஒரு மொழி பெயர்ப்பாளரை இவ்வழக்கில் நியமனம் செய்வதற்கு உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி/எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர் தனக்கு தமிழ் தெரியாது என இம்னுவில் தெரிவித்துள்ளார். ஆனால் பிரமாணப்பத்திரிக்கையில் தமிழில் எழுதப்பட்டு அதில் கையெழுத்து செய்துள்ளார். இது எவ்வாறு ஏற்புடையது என்பதை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மேலும் மனுதாரர் தன்னுடைய தாய்மொழியான தெலுங்கு மொழியினை தவிர வேறு மொழிகள் தெரியாது என்ற நிலையில் தமிழ் மொழியில் ஏற்பட்டுள்ள கிரையப்பத்திரத்தை எவ்வாறு பதிவு செய்ய இயலும். மேலும் இந்த மனுதாரர் சொல்லும் வாக்குமூலத்தினை மொழி பெயர்க்க தெலுங்கு தெரிந்த ஒரு நபரை நியமனம் செய்ய வேண்டும் என திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கலசபாக்கம் தாலுகாவில் கீழ்பளூர் கிராமத்தில் உள்ள ஒரு நபரை தெரிவித்துள்ளார். அவருடைய பெயர் என்ன என்பது தெறிவாக தெரிவிக்கவில்லை. மேலும் அறந்தாங்கி நகரத்தில் தமிழும் மற்றும் தெலுங்கும் பேசக்கூடிய நபர்கள் மிக அதிகமாக வசித்து வருகின்றார்கள். அவ்வாறு இருக்கையில் திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து மனுவில் கண்ட நபரை அழைத்து வர வேண்டிய அவசியம் என்ன என்பதை பற்றி மனுதாரர் தன்னுடைய பிரமாணப்பத்திரிக்கையில் தெரிவிக்கவில்லை. வழக்கு சொத்து புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. வாதி புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வருகிறார். பத்திரம் எதுவும் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது என்பதை அனுசரித்து அறந்தாங்கி நகரில் தெலுங்கு மற்றும் தமிழ் பேசக்கூடிய நபர்கள் இருந்து வரும் நிலையில் திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து கொண்டுவரப்படும் நபரை ஏற்படக்வடிய சட்ட முகாந்திரம் இந்த பிரமாணப்பத்திரிக்கையில் தெரிவிக்கப்படவில்லை. அதனடிப்படையில் இந்த மனு எந்தவகையிலும் ஏற்புடையதல்ல. தேவைப்படும் பட்சத்தில் மனுதாரரின் செலவில் அறந்தாங்கி நகரத்தில் வசித்து வரும் தமிழ் மற்றும் தெலுங்கு பேசக்கூடிய நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி அவர் மூலம் இந்த மனுதாரர் சொல்லும் வாக்குமூலத்தை மொழி பெயர்ப்பதை பொறுத்து இந்த எதிர்மனுதாரருக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை. எனவே மனுதாரரின் இந்த மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது 2 ம் பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி தரப்பு 1 சாட்சியான மனுதாரரை விசாரிக்க தெலுங்கிலிருந்து தமிழில் மொழி பெயர்ப்பதற்கு மொழி பெயர்ப்பாளரை நியமனம் செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மொழி பெயர்ப்பாளர் விபரமாக S.பாக்கியராஜ் த/பெ. K.சுப்ரமணியன், 01/161 ராஜா தெரு, கீழ்பளூர் கிராமம், கலசபாக்கம் தாலுகா, திருவண்ணாமலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் அறந்தாங்கி நகரத்தில் தமிழும் தெலுங்கும் பேசக்கூடிய நபர்கள் மிக அதிகமாக வசித்து வருகின்ற சூழ்நிலையில் திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து மனுவில் கண்ட நபரை அழைத்து வர வேண்டிய அவசியம் என்ன என்பது பற்றி மனுதாரர் தன்னுடைய பிரமாண வாக்குமூலத்தல் தெரிவிக்கவில்லை என்றும், அறந்தாங்கி நகரத்தில் வசித்து வரும் தமிழ் மற்றும் தெலுங்கு பேசக்கூடிய நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி அவர் மூலம் மனுதாரரின் வாக்குமூலத்தை மொழி பெயர்ப்பது தொடர்பாக எதிர்மனுதாரருக்கு ஆட்சேபணை இல்லை என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவை பொறுத்த வரை பிரதிவாதி 1 சாட்சியத்தை மொழி பெயர்க்க மொழி பெயர்ப்பாளர் நியமனம் செய்வதில் எதிர்மனுதாரருக்கு ஆட்சேபணை இல்லை ஆனால் குறிப்பிட்ட நபரை நியமனம் செய்வதில் தான் ஆட்சேபணை உள்ளது என்று கட்சி செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவின் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மொழிபெயர்ப்பாளருக்கு தெலுங்கு மொழி போதிய அறிவு உள்ளது என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே இந்த மனுவில் குறிப்பிட்ட மொழி பெய்ர்ப்பாளரை நியமனம் செய்ய முடியாது. இருப்பினும் மனுதாரருக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழியில் பரிட்சயம் இல்லாததாலும் அவரது தாய்மொழியான தெலுங்கு மொழியை தவிர வேறு மொழி தெரியாது என்று கட்சி செய்துள்ளதாலும் நீதியின் நலன் கருதி இம்மனுவானது பகுதியாக மனுதாரரை தெலுங்கு மொழியில் விசாரிக்க மொழி பெயர்ப்பாளருக்கு தெலுங்கு மொழியில் போதிய எழுத்தறிவு உள்ளது என்பதை காட்டுவதற்கான சான்றிதழ் உடைய உரிய மொழி பெயர்ப்பாளருக்கு மனுதாரர் சாட்சிபடி கட்டி அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

முடிவாக இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு மனுதாரரை தெலுங்கு மொழியில் விசாரிக்க மொழி பெயர்ப்பாளருக்கு தெலுங்கு மொழியில் போதிய எழுத்தறவு உள்ளது என்பதை காட்டுவதற்கான சான்றிதழ் உடைய உரிய மொழி பெயர்ப்பாளருக்கு மனுதாரர் சாட்சிபடி கட்டி அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2024-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை

**//உண்மை நகல்//**

V SIVAGAMASUNDARY
Digitally signed by V SIVAGAMASUNDARY
Date: 2024.07.18 15:42:40 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**

**I.A.No.1009/2023**

**O.S.No.135/2016**

**நாள்.18.07.2024**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**அறந்தாங்கி.**